பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
08 07 2024 **MONDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசுமுறைப் பயணமாக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ரஷ்யா புறப்பட்டுச் செல்கிறார்.

2. இளநிலை நீட் தேர்வு தொடர்பான மனுக்களை உச்சநீதிமன்றம் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறது..

3. ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சராக மீண்டும் பதவியேற்றுள்ள திரு. ஹேமந்த் சோரன், அம்மாநில சட்டப்பேரவையில் இன்று நம்பிக்கை வாக்கு கோருகிறார்.

4. பிரான்ஸ் பொதுத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறவுள்ள நிலையில், இடதுசாரி கட்சிகள் அடங்கிய முன்னணி அதிக இடங்களில் வெற்றிபெறும் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

5. டைமண்ட் லீக் தடகள போட்டியில், 3 ஆயிரம் மீட்டர் தடை ஓட்டத்தில், இந்தியாவின் **Abinash Sable** புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்..

>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ரஷ்யா – ஆஸ்திரியா நாடுகளுக்கு மூன்று நாள் அதிகாரப்பூர்வ சுற்றுப் பயணத்தை இன்று தொடங்குகிறார்.

தனது பயணத்தின் முதற்கட்டமாக மாஸ்கோ செல்லும் பிரதமர், அங்கு நடைபெறவுள்ள இந்தியா – ரஷ்யா 22-வது ஆண்டு உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, கல்வி, கலாச்சாரம், மக்களுக்கு இடையேயான பரிமாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நிலவும் இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுடன் விவாதிக்கவுள்ளார்.

சர்வதேச மற்றும் மண்டல அளவில் இருநாடுகளுக்கும் பயனளிக்கும் விஷயங்கள் தொடர்பாகவும் இரு தலைவர்களும் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவுள்ளனர்.

பிரிக்ஸ், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு, ஜி.20, கிழக்கு ஆசிய உச்சிமாநாடு மற்றும் ஐ.நா சபை ஆகியவற்றில் இருதரப்பு ஈடுபாடு குறித்தும் இரு தலைவர்களும் விவாதிக்கவுள்ளனர்.

இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை வரவேற்று, ரஷ்ய அதிபர் விருந்தளிக்கவுள்ளார்.

நாளை பிரதமர் ரஷ்யாவில் உள்ள இந்திய சமூகத்தினரிடையே உரையாற்றவுள்ளார்.

க்ரம்ளின் வளாகத்தில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்தில் மரியாதை செலுத்தவுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, மாஸ்கோவில் உள்ள கண்காட்சிக் கூடத்திற்கும் செல்லவுள்ளார்.

இந்த நிகழ்ச்சிகளுக்கு இடையே பிரதமர் மற்றும் ரஷ்ய அதிபர் மட்டுமே பங்கேற்கக்கூடிய பேச்சுக்களும், அதனைத் தொடர்ந்து இருநாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுக்களும் நடைபெறவுள்ளன.

பிரதமரின் ரஷ்யப் பயணம் குறித்து செய்தியாளர்களிடம் வெளியுறவுத்துறை செயலர் திரு. வினெய் மோகன் க்வாட்ரா, சர்வதேச அளவில் அரசியல் ரீதியாக எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்ள ரஷ்யாவுடனான உறவுகளுக்கு இந்தியா சிறப்பு முக்கியத்துவம் அளிப்பதாக கூறினார்.

இந்நிலையில், பிரதமரின் ரஷ்ய வருகை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று அந்நாட்டுக்கான இந்தியா தூதர் திரு. வினெய் குமார் தெரிவித்தார்.

தனது சுற்றுப் பயணத்தின் இரண்டாவது கட்டமாக நாளையும், நாளை மறுநாளும் பிரதமர் ஆஸ்திரியா செல்கிறார்.

அந்நாட்டின் அதிபர் அழைப்பின் பேரில் அங்கு செல்லும் பிரதமர், இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உயர் தொழில்நுட்பம், ஸ்டார்ட் அப் துறைகள், ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றில் இந்தியாவுக்கான ஏராளமான வாய்ப்புளை தரக்கூடிய நாடாக ஆஸ்திரியா உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<<

இளநிலை நீட் தேர்வு தொடர்பான மனுக்களை உச்சநீதிமன்றம் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறது.

இந்த தேர்வை மீண்டும் நடத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தும் 26 மனுக்களை, தலைமை நீதிபதி **D.Y.** சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் கொண்ட அமர்வு விசாரிக்கவுள்ளது.

நீட் தேர்வு முறைகேடுகள் தொடர்பாக தன்னிச்சையான புலனாய்வு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்பது உள்ளிட்ட மாணவர்களின் கோரிக்கைகளையும் உச்சநீதிமன்ற அமர்வு விசாரிக்கவுள்ளது.

இதனிடையே, மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் இந்த ஆண்டுக்கான இளநிலை நீட் தேர்வை மீண்டும் நடத்த தேவையில்லை என தெரிவித்துள்ளது.

பெரிய அளவில் தேர்வு முறைகேடுகள் நடைபெறவில்லை என்றும், புதிதாக தேர்வு நடத்தினால் ஏற்கனவே தேர்ச்சி பெற்றுள்ள லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக்கூடும் என்றும் அந்த பிரமாண பத்திரத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>><<<<<

ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சராக மீண்டும் பதவியேற்றுள்ள திரு. ஹேமந்த் சோரன், அம்மாநில சட்டப்பேரவையில் இன்று நம்பிக்கை வாக்கு கோருகிறார்.

இதற்காக அம்மாநில சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்திற்கு இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இன்று கட்டாயம் பேரவைக்கு வரவேண்டும் என்று கொறடா உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜே. எம். எம் அரசுக்கு ஆதரவளித்து வரும் காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம், சிபிஐ எம்.எல் ஆகிய கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களும் பேரவையில் கட்டாயம் ஆஜராகி அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

81 உறுப்பினர்களைக் கொண்ட ஜார்க்கண்ட் சட்டப்பேரவையில் ஐந்து இடங்கள் காலியாக உள்ளன.

தற்போதைய நிலவரப்படி நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற 39 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், திரு. ஹேமந்த் சோரன் அரசுக்கு 44 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது.

வாக்கெடுப்பில் வெற்றிபெற்ற பின்னர் புதிய அமைச்சர்கள் பதவியேற்பார்கள் என்று ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் மூத்த தலைவர்கள் தெரிவித்தனர்.

>>>><<<<<

அதானி குழுமம் தொடர்பான முக்கியமான அறிக்கையை முன்கூட்டியே வெளியிட்டதற்காக **Hindenburg** ஆய்வு நிறுவனத்திற்கு இந்திய பங்குகள் பரிவர்த்தனை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

முக்கியமான அந்த அறிக்கையை **Hindenburg** ஆய்வு நிறுவனம், நியூயார்க்கில் உள்ள **Markingdon** என்ற நிறுவனத்திற்கு அளித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**kingdom Hedge fund** நிறுவனம் கோட்டக் மகேந்திரா நிறுவனத்துடன் தொடர்புடையது என்றும் அதானி நிறுவனத்தின் பங்குகள் 150 பில்லியன் டாலர் அளவிற்கு வீழ்ச்சியடைந்த போது இந்த நிறுவனங்கள் ஆதாயமடைந்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>>><<<<<

மத்தியப்பிரதேச மாநிலத்தில் முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் தலைமையிலான அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்படுகிறது.

புதிய அமைச்சர்களுக்கு மாநில ஆளுநர் திரு. மங்குபாய் பட்டேல் பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

>>>><<<<<

அமர்நாத்தில் உள்ள பனிலிங்கத்தை தரிசிக்க 5 ஆயிரத்து 800 பேர் கொண்ட மற்றொரு குழுவினர் ஜம்முவிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இதில் 4 ஆயிரத்து 521 ஆண்களும், ஆயிரத்து 139 பெண்களும், 9 குழந்தைகளும் அடங்குவர்.

அமர்நாத் புனித யாத்திரையை முன்னிட்டு, வழிநெடுகிலும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனையில், உயிரிழந்த தீவிரவாதிகளின் எண்ணிக்கை 6ஆக அதிகரித்துள்ளது.

தெற்கு காஷ்மீரின், குல்காம் மாவட்டத்தில் மோடர்காம் என்ற கிராமத்தில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து பாதுகாப்பு படையினர் அப்பகுதியை சுற்றி வளைத்து சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது பதுங்கியிருந்த தீவிரவாதிகள், பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

இதையடுத்து, பாதுகாப்பு படையினர் நடத்திய பதில் தாக்குதலில் 6 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல் நடவடிக்கையின் போது ராணுவ வீரர்கள் இரண்டு பேர் வீரமரணம் அடைந்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதிகளின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஜம்மு காஷ்மீர் காவல்துறை தெரிவித்துள்ள்ளது.

>>>><<<<<

தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

இந்நிலையில் அரசியல் தலைவர்கள் இத்தொகுதியில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று, திமுக வேட்பாளரை ஆதரித்து, அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. உதயநிதி ஸ்டாலினும், பாமக வேட்பாளரை ஆதரித்து அக்கட்சியின் தலைவர் திரு. அன்புமணி ராமதாசும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

திமுக சார்பில் திரு. அன்னியூர் சிவா, பாமக சார்பில் திரு. சி. அன்புமணி, நாம் தமிழர் கட்சியின் சார்பில் டாக்டர் அபிநயா உள்ளிட்ட 29 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 13ஆம் தேதி எண்ணப்படும்.

>>>><<<<

பிரான்ஸ் பொதுத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறவுள்ள நிலையில், இடதுசாரி கட்சிகள் அடங்கிய முன்னணி அதிக இடங்களில் வெற்றிபெறும் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன

முதல்சுற்று தேர்தலில் எந்த கூட்டணிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், இரண்டாவது மற்றும் கடைசி சுற்று தேர்தல் நேற்று நிறைவடைந்தது.

சுமார் 60 சதவீத வாக்குகள் பதிவாகியிருப்பதாகவும், இது கடந்த 40 ஆண்டுகளில் அதிகபட்ச வாக்குப்பதிவு என்றும் பிரான்ஸ் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த தேர்தலில் இடதுசாரி கட்சிகள் அடங்கிய நியூ பாப்புலர் ஃபிரண்ட் 172 முதல் 192 இடங்களில் வெற்றிபெறும் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

வலதுசாரி கட்சியான **National Rally** 132 முதல் 152 இடங்கள் வரை வெற்றிபெறலாம் என்றும் தற்போதைய அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன் தலைமையிலான மிதவாத கூட்டணி 150 முதல் 170 இடங்கள் வரை கைப்பற்றலாம் என்றும் ஊடகங்களில் வெளியான கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

எந்த கூட்டணிக்கும் பெரும்பான்மை இடங்கள் கிடைக்காது என்றும் அதில் தெரியவந்துள்ளது.

அதிகாரப்பூர்வ தேர்வு முடிவுகள் இன்று மாலை வெளியாகவுள்ளன.

>>>><<<<

டைமண்ட் லீக் தடகள போட்டியில், 3 ஆயிரம் மீட்டர் தடை ஓட்டத்தில், இந்தியாவின் **Abinash Sable** புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்.

பாரிஸில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், பந்தய தூரத்தை அவர், 8 நிமிடம் 9 வினாடிகளில் கடந்து தாம் ஏற்கனவே புரிந்த சாதனையை முறியடித்தார்.

எத்தியோப்பிய வீரர் முதலிடத்தை பிடித்தார்.

>>>><<<<

இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 100 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹராரேயில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 234 ரன் எடுத்தது.

அபிஷேக் சர்மா அற்புதமாக விளையாடி சதம் அடித்தார்.

ருத்ராஜ் கெய்க்வாட் 77 ரன்னும், ரிங்கு சிங் 48 ரன்னும் எடுத்தனர்.

235 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ஜிம்பாப்வே அணி, 18 புள்ளி நான்கு ஓவரில் 133 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

முகேஷ்குமார், ஆவேஷ்கான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ரவி பிஷ்னோய் 2 விக்கெட்டுகளையும், வாஷிங்டன் சுந்தர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

>>>><<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய தென்னாப்பிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 177 ரன் எடுத்தது.

இந்திய அணி விளையாடுவதற்கு முன்பு மழை பெய்ததால், ஆட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

**>>>>END<<<<<**